# இந்துசமய அற்புதங்கள்

புதியவை 2018



ஸ்ரீவாணி வெளியீட்டகத்தின்

**அற்புதங்கள் வெளியீட்டு வரிசையில் 10வதும்**
**ஆத்மீகப் பணியில் 22ஆவது இலவச வெளியீடுமாகும்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொருளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| பிரபஞ்சத்தில் தூலமும் சூக்குமமும் | சு.ஜெயகோபாலசாமி | 02 |
| மாங்கல்ய வரம் அருளிய அம்மன் | சிந்துகா கிருஸ்ணசீலன் | 12 |
| தீராத நோய் தீர்த்த வைரவர் | சிந்துகா நடேஸ்வரன் | 13 |
| கடவுளின் அனுக்கிரகம் | சிவதாரணி – சுவிஸ் | 14 |
| அம்பாள் அற்புதம் | அருமைத்துரை செல்வச்சந்திரன் | 15 |
| அற்புதம் நிகழ்த்திய ஆத்தாள் | ந.கவிதாசன் – கனடா | 16 |


## அன்புநிறை அடியவர்களுக்கு!

அடியேன் இதுவரை லண்டனில் சக்திவேல் ஆலயம், சரவணையில் நாவலடி ஞானவைரவப் பெருமான் தேவஸ்தானம், தொண்டைமானாறு வீரகாளியம்பாள் ஆலயத்திற்கு அண்மையில் பத்திரகாளியம்பாள், மீசாலை வடக்கில் கௌரி அம்பாள், கிளிநொச்சி செல்வாநகர் கந்தன் குளத்தருகில் காளி, முருகன் ஆலயங்கள் என பல ஆலயங்களை பல அன்பர்களுக்கு அற்புதங்களைக் கிடைக்கச் செய்து, இறைமார்க்க ஆன்மீகப் பாதையில் தடம்பதிக்கச் செய்து மகிமைவாய்ந்த ஆலயங்களைத் தோற்றுவித்துள்ளேன் என்கின்ற ஆதமதிருப்தியோடு பெருமிதமடைகின்றேன்.

அடியேன் 2003ம் ஆண்டு அம்பாளின் எழுந்தருளி விக்கிரகத்தோடு வன்னியிலிருந்து மீண்டுவந்து ஆலயம் கட்ட ஆரம்பித்தபோது உறவுகள் சிலரின நெருக்குவாரங்கள் தந்திரோபாயங்களைத் தாங்கமுடியாமல் அனலிடைப் புழுவாக தவித்தநிலையில் அம்பாள் விக்கிரகத்தையே கையிழந்தேன். தாயானவள் அந்நேரம் உடனேயே அடியேனின் குடியிருப்பு வளவிலுள்ள வேப்பமரத்தில் தன்னுருவமாகத் தோற்றம் கொண்டாள். புராண காலத்தில் நடந்தது போனற அற்புதங்கள் நடந்தன. இந்நிலையில் வேப்பமரத்தின் கீழ் ஆலயத்திற்கு அடிகோலப்பட்டது. இதனால் அவ்விடத்தைவிட்டு அகற்றப்பட்டேன். யாழ்ப்பாணம் இராசா வீதி மேல்மாடியில் பல வருடங்கள் துறவற வாழ்க்கையானேன். நல்லூரானைப் பற்றினேன். அசுரர்களுடன் சம்ஹாரம் நிகழ்த்திய எந்தக்கடவுளும் தோற்றதாக வரலாறுகள் இல்லை என்பதற்கமைய ஆத்தாள் – சிம்மவாஹினி தாண்டவமாடினாள். திருவிளையாடல்கள் புரிந்தாள். 14 வருடங்களிற்குப்பின் ஆலயம் எழுந்தது. 25.06.2018 அன்று மஹா கும்பாபிஷேகம். இதன் இரண்டு படங்கள் பின் அட்டைப்படத்தில். இதன் காரணமாக நேரமின்மையால் ஒன்பது வருடங்கள் சந்நிதியானுக்கு ஆற்றிய வெளியீடுகள் இவ்வருடம் செய்யவில்லை. தாமாக அன்பர்கள் அனுப்பிய சில அற்புதங்களையும் நிதியையும் வைத்துக் கொண்டு மிகக் குறுகிய காலத்தில் இவ்வெளியீடு தயார் செய்யப்பட்டுள்ளது.

சக்தி மைந்தன்
சி. சிவகுமாரன் 0770432796

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அதிசயம்................!
## மெத்த உண்டு.....!

எந்நாளும் நல்லுரைவலம்வந்து வணங்கினால்.
இடர்கள் எல்லாம்போமே!
அந்நாளில் ஆசான் அருந்தவம் செய்த இடம்
அது ஆதலாலே அதிசயம் மெத்தஉண்டு
(எந்நாளும்..)

வேதாந்தம் சித்தாந்தம் கற்றதனால் என்ன?
வேடிக்கைக் கதைகள் பேசினால் என்ன?
வீதியில் வந்தோருக்கால் விழுந்து கும்பிட்டால்
வில்லங்கம் எல்லாம் இல்லாமல் போமே!!
(எந்நாளும்...)

சத்தியம், பொறுமை, சாந்தம், அடக்கம்,
நித்தியம், அநித்தியம், தெரியும் நிற்குண
பக்திசெய் உத்தமர் பரவும் நல்லூரில்
நித்தியம் வந்து பார்த்தால் முத்தி நிச்சயமே!
(எந்நாளும்...)

## நல்லூரான் திருவடி

நல்லூரான் திருவடியை நான் நினைத்த மாத்திரத்தில்
எல்லாம் மறப்பேனேடி கிளியே இரவு பகல் காணேனடி
ஆன்மா அழியாதென்று அன்றெனக்கு சொன்ன மொழி
நான் மறந்து போவேனோடி கிளியே நல்லூரான் தஞ்சமடி
தேவன் சிறைமீட்ட செல்வன் திருவடிகள்
காவல் எனக்காமெடி கிளியே கவலை எல்லாம் போகுமடி
எத்தொழிலைச் செய்தாலென் ஏதவத்தைப் பட்டாலென்
கர்த்தன் திருவடிகள் கிளியே காவல் அறிந்திடடி
பஞ்சம் படை வந்தாலும் பாரெல்லாம் வெந்தாலும்
அஞ்சுவமோ நாங்களெடி கிளியே ஆறுமுகன் தஞ்சமெடி
சுவாமி யோகநாதன் சொன்ன திருப்பாட்டைந்தும்
பூமியில் சொன்னாலடி கிளியே பொல்லாங்கு தீருமடி
நல்லூரான் திருவடியை நான் நினைத்த மாத்திரத்தில்
எல்லாம் மறப்பேனேடி கிளியே இரவு பகல் காணேனடி,

- தவத்திரு. யோகர் சுவாமிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரபஞ்சத்தில் தூலமும் சூக்குமமும்



பிரபஞ்சத்தில் மானுடத்தின் தத்துவ அங்கங்களாய் விளங்குவது பூதம் ஐந்தும் கரணங்கள் ஐந்தும் பொறிகள் ஐந்தும் புலன்கள ஐந்தும் பொருந்திய குணங்கள் ஓர் நான்கும் (மனம், புத்தி, சித்தம், குணம்) நாதமுமே. நாதம்:- இது வித்தியா தத்துவங்கள் எனும் காலம் நியதி, வித்தை, ஆக்கம், புருடன், மாயை கலை எனும் ஏழும், சிவ தத்துவங்களாய ஈஸ்வரம், சுத்தவித்தை, சதாக்கியம், விந்து, சிவம் ஆகிய ஐந்தும், பன்னிரு தத்துவங்களாய் சேர 36 தத்துவங்கேளயாம். இத் தத்துவங்களை கடந்து சிவ வெளியாம் இது பூதம், கரணம், பொறிகள். ஐம்புலனும் பொருந்திய குணங்கள் ஓர் மூன்றும் நாதமும் கடந்த வெளி. மாயா ஆனவர் மாயையினாலே நிலம், நீர், காற்று, ஆகாயம், நெருப்பு ஆகிய ஐம்பூதங்கள் அடங்கிய தாதுவாய் ஸ்தூல உடம்பில் சூக்குமமான ஆன்மாவை அடக்கி, இப் பிரபஞ்சத்தில் படைத்து போகத்தில் வீழ்த்தி அமிழ்த்தி அனுபவிக்க வைத்து ஜனன வழிகண்ட இருவினை பயனாக தன்னை அடைந்து உய்யும் பொருட்டு பஞ்ச கிருத்தியத்தை நிகழ்த்தி நிற்பவன் சிவன்.

ஒரு நாட்கூலிக்கு மாலையில் ஊதியம் அவ்வூதியம் மறு நாளுக்கு உதவுவது போல் இப் பிறவியில் நாம் செய்யும் வினைப் பயன் மறு பிறவிக்கு ஊதியமாகிறது என்பது போல் இப் பிறவியில் விதைக்கும் விதையே மறுபிறவிக்கு வரும் கொடையாம் (விதியாம்) இவற்றை எம்முன்வினைப் பயன் என்கிறோம். புவியில் அரிதாகிய மானிடப்பிறவி ஸ்தூல பூதம் ஐந்தும் கொண்டு இயற்றப்பட்டது ஸ்தூலசரீரம் இதற்கு மெய், வாய், கண், செவி, மூக்கு இவை ஞானேந்திரியங்கள் ஆகும். இவற்றிற்குள்ளே இருப்பதுதான் தன்மாத்திரை. இது தான் சூக்கும பூதம் தன் மாத்திரையை அனுபவிக்க கன்மேந்திரியங்களாய் விளங்குவது. செய்வது கை, நடப்பது கால், வசனிப்பது வாக்கு, விடுவது குதம், இன்பம் தருவது - குறிகளும் ஆகும். இங்கே காணப்படும் அதிசயம் தலையிலேயே மூளை, கண். மூக்கு, வாய், செவி சேர்ந்திருப்பது அற்புதமே. ஆனால் உதவி செய்யும் கன்மேந்திரியங்களை உறுப்புக்களாய் கொண்ட வடிவம் ஸ்தூல சரீரம் ஆகும். சூக்கும சரீரத்தில் மனம், புத்தி, சித்தம், குணம் எனும் அந்தக் கரணங்களும் கொண்டு 24 ஞானத்தத்துவங்களை அடக்கி விளங்கி நிற்பது இவ்விரு சரீரங்களும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்தூலமாகிய ஜடத்தை அருணகிரியார் கந்தரலங்காரத்தில் தோலால் சுவர் வைத்து நாலாறு காலால் சுமத்தி இருகாலால் எழும்பி வளை முதுகோட்டி இருகைநாற்றி நரம்பால் ஆர்க்கையிட்டு தசைகொண்டு வேய்ந்த அகமென்றும், அகம் பிரிந்தால் என்று விழி வேற்றுமையாய் சூக்குமமான உயிரையும், வேலால் கிரி துளைத்தோன் இருதாளன்றி வேறில்லையே என்றும், மேலும் உதித்தாங்குஉழல்வதும் சாவதும் தீர்த்து என்னை உன்னிலொன்றாய் விதித்தாண்டருள் தருங்காலம் உண்டோ? என்றும் திருவருளை நாடி ஏங்கித் தவிக்கின்ற நிலையும் மேலும் இறையருள் பெற்று விட்டால் ''முடியாப் பிறவிக் கடலில் புகார்' என்றும், முழுதும் கெடுக்கும் மிடியால் (வறுமை) படியில் (பூமி) விதனப்படார் என்றும், அவுணர் குலம் அடங்கப் பொடியாக்கிய பெருமான் திருநாமம் புகல்பவரெ என்றும், உறுதிமொழி கூறுகின்றார். இன்னும் நாளென் செய்யும் வினைதான் என்செய்யும் எனை நாடிவந்த கோள் என்செய்யும் என்று பாவக்கிரகங்களுடன் எதிர்ந்து வெற்றிமுழக்கம் செய்தும் கொடுங் கூற்று என் செய்யும் என்று எமராஜனுக்கே சவால் விடுகின்றார். பிரமதேவனுக்கே எனக்கு மிண்டும் விதி எழுத வந்தால் எம்பிரான் அவர்க்கு முன்பொருமுறை ஒரு விலங்கிட்டவன் இப்போது இரு விலங்கிடுவான் என்று தண்டனை வார்த்தை வழங்கி நிற்பதை பங்கேருகன் என்ன பட்டோலையிலிடப் பண்டுதளை தங்காலில் இட்டதறிந்திலனோ என்று சவாலிட்டதையும், இயம தர்மராஜனுக்கு மேலும் தந்தைக்கு முன்னம் தனி ஞானவாளொன்று சாதித்து அருள் கந்தசுவாமி என்னைத் தேற்றிய பின்னர்காலன் வெம்பி வந்து என்னை என் செயலாம் என்றும், அவன் திருவருளாகிய சக்தி வாளொன்றினால் இயம தர்மனின் கையொன்றிலிருக்கும் பயங்கரமாய திரிசூலத்தை திருவருளினாலே உருக்கி சிதைப்பேன் என்றும், போர்முழக்கம் செய்கின்றார். என்னே வேலனின் அருட்கொடை!

அருணகிரியார் நாவிலே முருகப்பெருமான் பிரணவத்தை வேலினால் பொறித்த காரணத்தால் ஞான தேசிகனாய் விளங்கி நிற்கின்றார். முருகனான சரவணனை சிவன் பெற்றதால் ஆண்பிள்ளை என்றே சொல்லவேண்டும். சிவனும் சக்தியும் ஒன்றெனபதால் சிவசக்தி மைந்தராகின்றார். சக்தியாரின் ஞானப்பாலை அருந்தியதால் ஞானத்தின் ஞானமாய் விளங்கி நின்றார். முருகப்பெருமானின் நிலை இவ்வளவு என்றால் சிவன் பெருமை எவ்வளவு என்று எம்மால் கூற முடியுமா? முடியாது!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தமிழ்வேதம்:** வாசி வாசி வாசி என்று தொடர்ந்து விரைவாய் சொல்லில் உச்சரிப்பதால் வாசி - சிவா ஆகி சிவரூபமாய் விளங்கும்! மேலும் தொடர்ந்து சிவ சிவ சிவ என்று சொல்லி வர சிவ - வசி ஆகி நிற்கும் எம் மனத்துள்ளே சிவம் வசிந்தும், சிவத்துள்ளே மனம் வசிந்தும் மனமும் சிவமும் சிவமாகி நின்று; வாசக தீட்சை பெறுகின்றது ஆன்மா (நீங்களும் உச்சரித்துப் பாருங்கள்) இது தமிழ் வேதம்.

அநாதியானவன் சிவன், நித்திய ஆன்மாவின் பொருட்டு பஞ்ச கிருத்தியங்களை புரிகின்றான். காரணம் சிவனானது அநாதியானது ஆன்மா நித்தியமானதால் சிருஷ்டி (படைத்தல்) திதி, சங்காரம் கூடாதவான்மா எனப்பட்டது சிவத்துடன் ஐக்கியப்பட்டு சீவன் என்கின்ற நிலை மறந்து சிவமாய் நிற்கும் இந்நிலை முத்தி நிலையின் முதற்படியாகும். இந்நிலை முற்றின் தமிழ் சொல்லில் 'சீவன் (சீ - சி) சீவன் ஆனாது 'சீகரத்தின் திரையில் சுழி மறைந்தால் சுழியாகிய விதியை சீவன் மறந்து சிவமாகியே நிற்கிறது. (சீவன் - சிவன்) மாயையயின் விதியாகிய சுழியை பொருத்திய உடலை மறந்து சீவன் சிவன் ஆகி நிற்கின்றது. சிவமானது திரையாகிய விசிறி (ஊசல் மறைத்து நிற்கும் போது சவமாகி நிற்கும் சிவம் - சவம்) (சீவன் - சிவன் - சிவம் - சவம்) பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார் இறைவனடி சேராதார் சீவன் சிவமாகி நிற்கும் வேளை பல்லாண்டு காலம் வாழும் சாத்தியத்தை இந்த மானுடம் பெறும் வசதி கொண்டது. அது தான் தவயோக சித்தநிலை.

தமிழ் எழுத்துக்கள் மட்டுமல்ல எந்தமொழியிலும் சுழி, திரை, நெடுங்கோடு, குறுக்குக்கோடு, புள்ளி ஆகிய ஐந்து உறுப்புக்களும் அமைகின்றன. அரபு மொழியில் உடுக்கு குறியும் ஒரு உறுப்பாம். தமிழ்மொழியானது அட்சரங்களின் ஐந்து உறுப்புக்களையே கொண்டது. இணையில்லா தமிழ்மொழியின் முதல் எழுத்தாகிய 'அ' சுழி, திரை, நெடுங்கோடு, குறுக்குக்கோடு ஆகிய நான்கையும் (OU-I) கொண்டது. அ, புள்ளியானது முற்றும் புள்ளியாம். ''அகரமுதல எழுத்தெல்லாம் ஆதிபகவன் முதற்றே உலகு'' (வள்ளுவன்) ''அகர உயிர் போல அறிவாகி எங்கும் நிகரில் இறை நிற்கும் நிறைந்து'' என்றார் உமாபதி சிவம் (திருவருட்பயன்), அகரமுமாகி அதிபனுமாகி அதிகமுமாகி அகமாகி என்றார் அருணகிரிநாதர் (திருப்புகழ்), அகரமானது அம்மா, அப்பா, அத்தன், அரன், அம்மை அருள் போன்று எத்தனையோ முன்நிற்கும் தமிழ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொற்களாய் விளங்குவதும் அயன் எனவாகி, அரி எனவாகி, அரன் எனவாகி அவர் மேலாய இகரமும் (இறை) ஆகி நிற்கும் சிவம். விசேடமாக திருவிசைப்பாவிலே அண்டமோர் அணுவாம் பெருமை கொண்ட அணுவோரண்டமாம் என்றும் சொற்பதங்களினால் விளங்கி நிற்பதும், ''இறையாய் மாயாவே'' ஒடுக்கத்துள் ஒடுக்கமாயும் பாரிய பொருளில் பெரிதாயும் விளங்கி இயக்கியும் இயங்கியும் நிற்பவன் சிவம் என்கின்றார் சேந்தனார்.

**தீட்ஷாபேதம்:** வேதாகமம் கூறுவது என்ன. இத்தனை மேலாய சிவத்தை ஆன்மா அடைய (ஈடேற) என்ன வழி? சமய தீட்சை முதலில் பெற்றும், அறுவகை தீஷை பெற்றுய்ய வேண்டுமென்கிறது வேதம். (சப்த, ஸ்பரிச, நயன, ரூப, ரச, ஸ்கந்தம்). சமய தீட்டை பெற்று சரியைத் தொண்டை சிவனடியார்க்கும் ஆலயத்திற்கும் தொண்டு செய்தும், கிரியை. இது விசேட தீட்சை பெற்று கிரியை வழிபாட்டு முறையாகிய சிவனடியார்க்கும், சிவாலயத்திற்கும் தொண்டு செய்வதுடன் சிவலிங்க பூசையும் மேற்கொண்டும், மேலும் நிர்வாண தீட்சை பெற்று சரியை, கிரியை, யோகத் தொண்டையும், சிவத்திற்கும், சிவனடியார்க்கும் தொண்டாற்றியும், சிவலிங்க பூஜை செய்தும், ஞானபூஜை செய்தும், அதன் மேல் ஆச்சாரியார் அபிசேகம் பெற்று சிவனடியார்க்கும், சிவாலயத்திற்கும் சிவத்திற்கும் தொண்டு செய்து (வர்ணாச்சிரமத்திற்கேற்ப சந்தியா வந்தனம் செய்வதே சிறப்பாயமையையும்) ஆச்சாரியார் அபிசேகம் பெற்று சிவோக நிலை நின்று சரியைத் தொண்டுமாற்றி சிவலிங்க பூசை செய்தும் ஞான பூசை செய்தும் மேலான தீர்க்கை, பிரதிட்டை முதலியன செய்தும் வரக்கூறுகிறது.

(ஹோமத்துடன் கூடிசெய்வது ஔத்திரிய தீசையாம். இது நயன, ஸ்பரிச வாசகக, மானச, யோக சாஸ்திர மெனும் 6 வகை பெறும். இவ்வாறு (6) தீட்சையும் சக்தி தீர்க்கையாகிய ஞானவதி பிரகாரம் ஆறு வகையும் கிரியாவதி பிரகாரம் மாந்திரிய தீர்க்கையாகிய ஆறுவகை தீட்சையாவும் மொத்தம் பன்னிரு வகைப்படும். இப்பன்னிரு தீர்க்கையும் சமய விசேட நிர்வாண தீர்க்கைக்கு உள்ளாகும் போது 3x12 = 36 முப்பத்தாறு வகைப்படும். சமய, விசேட, நிர்வாண, ஆச்சாரியார் அபிடேகமாக நான்கும் சேர 40 வகை தீட்சை பெற்றார் தேசிகராவார்.

சாத்திரங்கள் ஓதுகின்ற சட்டநாத பட்டரே வேர்திரைப்பு வந்தபோது வேதம் வந்து உதவுமோ மாத்திரைப்போது உள்ளே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறித்து ஓங்க வல்லீரேல் சாத்திரப்பை நோய்களேது சத்தி, முத்தி, சித்தியே என்கின்றார் சித்தர்கள். இம்மானிடப்பிறப்பை நோக்கின், இறையடி சேர்வது தூரம் தூரம் தூரமென்று சொல்லுவார்கள். சோம்பர்கள், மண்ணும் விண்ணுமாய் பரந்தது அப்பராபரம். ஊரும் நாடும் காடும், மேடும் உழன்று தேடு ஊமைகாள் நேரமது ஆகுமுன்னே அறிந்து வந்து நில்லுமே என்கின்றார் சித்தர். நாலு வேதமோதுவீர் ஞான பாத மறிகிலிர் பாலினுள் நெய் சேர்த்தவாறு பாவிகள் அறிகிலீர் ஆலமுண்ட கண்டனார். அகத்துள்ளே இருக்கவே காலன் என்று சொல்லுவீர் கனாவிலுமறிகிலீர். வித்தில்லாத சம்பிரதாயம் மேலுமில்லை கீழுமில்லை தச்சில்லாத மாளிகை படைத்தவாறு அது எங்கனே? பெற்றதாயை விற்று அடிமை கொள்ளுகின்ற பேதைகாள் சித்தில்லாத போது சீவன் இல்லை இல்லையே என மொழிந்தார் சித்தர்.

**சரியையின் சாரம்:**

சிவாலயத்திற்கும் சிவனடியார்க்கும் தொண்டு செய்து மோட்சமடைதல் சாலோகமுத்தி என்று சொல்லப்படும்.

**கிரியையின் வழிநின்று:**

சரியைத் தொண்டுடன் சிவத்தை அகமும் புறமும் பூசித்தல். இதனால் கிடைக்கும் மோட்ஷம் ''சாரூப முத்தி'' யாகும்.

**யோகவழி நின்று:**

சரியை, கிரியையுடன் கூடி பின் தாமும் சிவமும் ஒன்றென உணர்ந்து, தியானத்தில் இருத்தல். இதனால் கிட்டும் மோட்சம் ''சாமீப முத்தி''

**ஞான வழி நிற்றல்:**

பசு, பதி, பாசம் முப்பொருளையும் அறிந்து நிட்டை கூடி சிவங்கூடி சிவ யோகத்திலிருந்து சிவத்துடன் ஐக்கியப்படல் ''சாயுச்சிய முத்தியே''.

''உவமை இல்லா கலைஞானம் உணர்வரிய மெய்ஞானம், தவமுதல்வர் சம்பந்தர் தாமுணர்ந்தார்'', மணிவாசகப் பெருமானும் குருந்த மரநிழலிலே சிவத்தால் தடுத்தாட்கொள்ளப்பட்டு சாம்பவ தீர்க்கையாகிய திருவடி தீட்ஷை பெற்றநிலை போன்றதே.

திருவடி தீட்ஷை என்பது காதலால் வருவது. அன்பு வழியில் வாழ்ந்து அண்ணலை அன்பு கொண்டு மனத்திருத்தி அவன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடித்தொண்டு பரவும் அன்பினால் வருவது காதல். அன்பு கொண்டார் வர நேரம் தவறின் வழி மேல்விழி வைத்து காத்திருப்பது அன்பின் அடையாளம்." பேசிக் கல்யாணம் செய்வதில் முதலில் வருவது அன்பு. ஆனால் காதலித்து வீடுவிட்டு பெண் ஓடுவதும் மாப்பிள்ளை பெண்ணை நாடி வந்து சிறை எடுத்து சென்று திருமணம் (கடிமணம்) புரிவதும் காதல். முருகப் பெருமானும் சிறைமீட்டு சென்றே வள்ளியை திருமணம் புரிந்ததாக கந்தபுராணம் கூறுகிறது. ''வள்ளி" என்பது மெய் அடியார்களேயாம். காதலாகி கசிந்து கண்ணீர் மல்கி என்னும் (திருப்பதிகத்தை) ஓதுவார் தமை நன்னெறிக்கு உய்ப்பதுவும் சோதி, சோதிப் பிளம்பினுள் திருஞான சம்பந்தப் பெருமானின் திருமண விழாவிற்கு வந்த சிவனடியார் கூட்டத்தினுடன் திருஞான சம்பந்தப் பெருமானும் மணமகளும் திருநாவுக்கரசரும் சிவத்துடன் சோதியுட் கலந்த வேளை பாடிய பாடல் ''காதலாகி கசிந்து கண்ணீர்" காதல் என்பது அன்பினும் பலபடி மேலாயதாகும். உண்மைக் காதலாலே தான். சிவம் வந்திறங்கி இரங்கி அருள் புரிவதையும் ஈற்றில் மோட்ஷ நிலையை அருளி ஐக்கியப்பட்டுச் சீவத்துடன் கலப்பதையும் காட்டி நிற்கும். சிற்றின்ப நிலையில் ஐக்கியம் என்றால் திருமணம் ஆகும். இவற்றைத்தான் வள்ளி திருமணம் விளக்கி நிற்கின்றது. முத்திக் கொரு வித்தாய் முருகன் திகழ்கின்றான் என்பது அருணகிரியாரின் திருப்புகழ்.

**மெய் அடியார்**

மெய் அடியார் யார்? மனம், வாக்கு, காயங்களினால் நெக்குருகி கண்களின்று ஆனந்த பஸ்ப்பம் ஆறாய் பெருக, தன்னை மறந்து தன்நிலை கெடும் வரை பிரமனின் மண்டையோட்டில் பிச்சை புகும் கொன்றை மாலையை தலைக்கணித்த சிவனை தலையாலே வணங்குபவருமாம், அசுரரும் தேவரும் பாற்கடலை திருவமுதிற்காக கடைந்த போது மத்தின் நாணாய் நின்ற வாசுகி வேதனை தாங்காது கக்கிய ஆலகால விடத்தை அசுரரும் தேவரும் உய்யும் பொருட்டு தாமே உட்கொண்டு கண்டத்தை நீலநிறமாக்கிய சிவனை கண்களேகண்டு நெக்குருகித் தொழுபவரும், செம்மேனியனின் திருவிளையாடல்களை செவி உற்றும் சுடலையிலே நடமிடும் பிரானை வாயார வாழ்த்தியும் மேகங்கள் உறையும் கயிலைமலை நாதனை நெஞ்சார நினைத்து உருகியும், நஞ்சுப்பையை வாயினுள் கொண்டிருக்கும் பாம்பை அரையில் செறித்த பரம்பொருளை கைகளைக் கூப்பித் தொழுபவரும், அரன் உறையும் அழகிய கோபுர



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாயிலுக்கு செல்லாதிருக்கும் கால்களால் பயன் என்ன என்னும் நினைவுடன் அவனே நமக்கு துணை, பிறிதொரு துணை நமக்கில்லையே என்னும் முடிவுடனும், உறுதியுடன் இறுமாந்திருந்து, திருமாலொடு நான்முகனும் காணாத் திருவடியை தேடி கண்டு கொண்டவனே மெய்யடியான் ''மனத்துக் கண் மாசிலன் ஆதல் அனைத்தறன் ஆகுலநீர பிற.

**மாயா மாங்கனி ஞானம்**

நெஞ்சமே கோயில் நினைவே சுகந்தம் அன்பே மஞ்சனத் தீர்த்தம் கொள்ளவராய்'' பராபரமே என்றார் தாயுமானவர். (மா+யா → மாயா) 'மா' என்றால் பரந்து விரிந்தும் 'யா' என்றால் ஒடுங்கியும் ஒடுங்கிய ஒடுக்கத்துள் ஒடுங்கியும் விரிவினுள் விரிவாயும் உள்ளார் சிவன். மாயையால் பிரபஞ்சத்தை படைப்பதே படைப்புத் தொழில் (இதன் விளக்கத்தை மற்றும் விளா விளக்கத்தில் பார்ப்போமாக'' 'மா' என்றால் மாமரம் என்றும் கருத்துப்படும். மாவின் விளக்கம் மாங்கனியிலேயே அடங்கிவிட்டது.

**திருக்கயிலை ஆனந்த கோலங்கொண்ட நிலை:** (சிறுவர் பகுதி)

கனகசபையிலே பார்பதி சகிதம் சிவனிருக்க திருவாசலிலே தமயனின் மூக்கை (துதிக்கையை) தம்பி இஞ்சியும், முளமும் சாணும் போட்டு அளக்க தம்பியின் கண்களை தமயன் எண்ணி ஒன்று இரண்டு என்று பன்னிரு விழியெனத் தொகுக்க குழந்தைகள் விளையாட்டு நடக்கும் வேளை இவ்விளையாட்டு பிணக்கை பார்பதி தீர்க்க. சிவன் கண்டு இரசிக்கும் வேளையுமாய் சிவனின் ஆஞ்ஞையாலே நாரத மாமுனி மாங்கனியைக் கொண்டு சமூகம் தருகின்றான். வந்த முனியும் இது ஞானக்கனி என்றும் பிரித்தால் ஞானம் கெட்டுவிடும் ஒருவரே உரித்தானவர் என்று மொழிந்து சிவன் கையில்லளித்து விடுகின்றான். குழந்தைகளோ கணக்கியலில் அளவைப் போட்டியில் ஒருவரை ஒருவர் சினந்து தாயிடம் முறையிட்டு குழந்தைப் பருவப் பிடிவாதம் இடும் நிலைவிட்டு இப்போ அந்த ஞானக் கனிக்கு போட்டியிட்டு எனக்கு எனக்கு என்று வாதித்து வர. சிவன் உலகை யார் முதலில் வலம் வருகின்றாரோ அவருக்கே ஞானக்கனி என்று திருவாய் மலர, மனோ வேகத்தையும் மிஞ்சிய வேகத்தை கொண்ட தாவடி ஓட்டு மயிலில் அரோகணித்து இதோ ஒரு நொடியில் சர்வ உலகை சுற்றி வருகின்றேன் எனறு புறப்பட்டான் ஆறுமுகன். செல்லுமிட மெல்லாம் ஒவ்வோர் லோகத்திலும் தாய், தந்தையரை காண்கின்றான். சர்வேஸ்வரன் சர்வ லோகங்களிலும் முருகனுக்கு காட்சி தருகின்றான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விநாயகன் தனக்குப் பாரிய வயிறு எழுந்து வேகமாய் முருகனைப் போல ஓடவும் முடியாது, வாகனமோ பெருச்சாளி, ஊரும் என்னுருவம் போன்றே எனக்கு கிடைத்த வாகனமும் என மனம் நொந்தான். சிந்திக்கத் தொடங்கினான். ஞானக் கொழுந்தல்லவா! கனியை பிரித்தால் ஞானம் கெட்டுவிடும் என்று மாமுனி உரைத்த வார்த்தையை உற்றுநோக்கி கனியுள் இருக்கும் ஞானத்தை துருவினான் விநாயகன். மனத்துள்ளே இரு கூறாக்கினான் வெளித் தோலினூடு அறிவால் நோக்கினான். தோல், கனியம், விதை மீண்டும் வித்தினுள்ளே சென்றான். பட்டை, வித்திலையுறை, வித்திலை, முளையுரு அங்கே தான் அறிவை நோக்கினான். கூறுபடுத்தினான். இருசமமாகப் பிரித்தால் முளையுருவில் இருக்கும் உயிர் இறந்து போம் என்பதை உணர்கின்றான். அந்த வித்துருவுள்ளே விநாயகன் சிவத்தை பார்வதி சமேதராய் கண்டார்.

முருகப் பெருமானோ ''மா'' பரந்து விரிந்த பிரபஞ்சத்தின் படைப்புகளில் காண விநாயகப் பெம்மானே ''யா'' வாகிய ஒடுக்கத்தில் மலமற்ற நின்மலனைக் காண்கிறான். (மாயாவை)

''மா'' என்பது விரிவுபடும், கனியுட் சிவன் சீவனாய் ஒடுங்கி நிற்பதை உணர்ந்தார். விநாயகப் பெருமான் விதை முளைத்து கிளை விட்டு கன்றாகி மரமாகி பூர்த்துக் கனிந்து தன்னைப் போன்று வேறு பல விதைகளைத் தரும் அவைகளும் அப்படியே மேலும் மேலும் விளைவை உண்டுபண்ணும் என்றும் நான் முதலில் உலகைவலம் வந்தேன் எனக்கூறி ஞானக்கனியை வாங்கும் பொழுது ஈசானத்தில் முருகப் பெருமான் பிரபஞ்ச லோகங்களை சுற்றி வலம் வந்து விட்டார்.

வித்தெல்லாம் ஒன்றென்று காட்டி, அதில் விளைவு பல பல வேறென்று காட்டி, சித்தெல்லாம் செய்தது பாரீர், திருச்சிற்றம்பலத்தே திருநட ஜோதி என்றார் இராமலிங்க வள்ளலார். அகக் கண்ணுள் ஞானக் கொழுந்து ஞானத்தைக் காண, ஞானபண்டிதனான முருகன் தானறிந்த ஞானத்தை வெளிப்படுத்த சித்தங் கொண்டு திருகோலங்களைக் களைந்து ஆண்டியாய் நின்றோர். படைவீடு சென்று யோகநிலை நின்று யோகியர்க்கும், சித்தர்க்கும் ரிஷிகட்கும், ஔவைக்கும், கீரனுக்கும் அருள் பாலித்து பிரபஞ்ச பிறவியை ஒடுக்கி பல்லாண்டு காலம் இயமராசனின் கைப்புகுதாமல் வாழ் வழிகாட்டி தானும் அவ்வழி இயங்கியதை இந்த ஞானக்கனி உணர்த்தி நின்றதை உலகோர் அறிய தானே சிவமாய் நின்றதையும் புராண வழிகளில் காணலாம். ''நவவெளி நால் வகையாகி நடுவெளிக்குள்ளே நடத்திய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீதி சிவவெளியாம் இது பாரீர் திருச்சிற்றம்பலத்தே திருநட ''ஜோதி'' ஆனந்தக் களிப்பில் வள்ளலார்.

மாவிலே விரிவு காட்டி 'யா' விலே ஒடுக்கம் காட்டி மாவிலே உயிரை கலந்து 'யா' என்கின்ற அட்சரத்தால் ஒடுங்க வைத்து மல பரிபாக மடைந்து சக்தி நிபாத நிலைபெற்று சிவத்துள் ஒடுக்கும் நிலையே ''சுத்தஜோதி, ஜோதியுள் ஜோதியுட் ஜோதி'' என்ற மாயாவால் படைக்கப்பட்ட மாயை! கொண்ட வாழ்வில் மாயை நீங்கும் காலத்தே சுத்த ஜோதியாய் விளங்கும் உயிர். சூரபத்மனின் தாய் மாயை (கந்தபுராண) மாயையான பொருள் எல்லாவற்றையும் சூரனுக்கு அதே மனத்தோடும் அசுர புத்தியோடும் வாழும் வரை எளிதில் வழங்கினாள். அமரராகி பின் நிலையாய வாழ்வை அதாவது தராசின் முள் போன்று நடுநிலை காட்டும். தவப்புண்ணியத்தின் நிலை நடுநிலை. நடுநிலை அடைந்ததால் அதன் பின்பேயே அற்புத நிலையெட்டும் மாயையைக் கடக்கும். மாயையாய் விளங்கி நிற்கும் பிரபஞ்சத்தைக் கடந்து மனதில் ஞானவெளி எட்டும். இது உறுதி என்பது போல, மாயையினின்று விடுபட்டு சூரபத்மன் தாமே பணி செய்யக் கருதினான் போல், காதல் கொண்டு மயிலாய் முருகனைச் சுமந்தும், முருக நாமத்தை முடியின் மேல் கொடியில் நின்று 'ஓம் முருகா நம' என்றும் 'சொக்கநாதம்' என்றும் அழைப்பது போல் பறைசாற்றி நின்றும் முருகப்பெருமானின் பக்தி கிருத்தியத்தில் ஐக்கியப் பட்டு பேரின்பத்தை நித்தியம் பெறுவதை கந்தபுராணம் சாற்றுகிறது.

ஒளியில் விளைந்த உயர் ஞான பூதரத்து உச்சியின் மேல், அளியில் விளைந்ததோர் ஆனந்த தேனை, அனாதியிலே வெளியில் விளைந்த வெறும் பாழைப் பெற்ற வெறுந்தனியை, தெளிய விளம்பியவா முகமாறுடை தேசிகனே என கந்தர் அலங்காரத்தில் அருணகிரிநாதர் வெளிப்படுத்துகின்றார்.

## தமிழ் ஞானம்

அனா அறிவாய் அகலான் அடியவர்க்கு வான் நாடர் காணாதமன் ஒன்றுடன் 0 சேர்ந்தால் 10 ஆவது போல் $1+0 \rightarrow 10$ ஆவது போல் $1+00 \rightarrow 100$ இப்படிப் பல கோடிக் கணக்கான இலக்கங்களைத் தருகிறது. அந்த ஒன்று '1' அந்த '1' ஒன்று அழிந்து விட்டால் பல கோடிக்கும் பெறுமதி இல்லைத்தான். ஒன்றானவன் உருவில் இரண்டாயும் உயிரான செந்தமிழில் மூன்றாயும் நின்றான். ஏன்? ஒன்றானது அகரத்தில் அழியாத



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஞானவெளியாய் திகழ்வது எண்ணும் எழுத்தும் கண் எனத் தகும். என ஞானத்தின் கண்களாயும் ஞானத்தையும் வெளிப்படுத்தி நிற்கின்றன. ஒவ்வொரு '0' பூச்சியமும் சுழியாய் ஜனனமாவது பிறப்பின் பெருக்கமேயாகும். ''ஏழு கடல் மணலை அளவிடின் அதிகம் எனது இடர்பிறவி அவதாரம் என்றார். அருணகிரி. அகரத்தின் தமிழ் மொழியின் முதல் எழுத்தும் அதையே விளக்குகின்றது சுழியாகிய விதி வலைப்பட்டு திரையாகிய ஊசல் வாழ்வில் போகத்தில் அமிழ்ந்து ஒருவனை (சிவத்தை) உணர்ந்து உல்லாச நிராகுல யோக இத சல்லாபவினோதனை, அறிவின் ஞான வினைவாய்ப்பட்டு ''சும்மா இரு சொல் அற'' என்பதை உணர்ந்து, சல்லாபத்தை ஞானவழி இருத்தி எல்லாம் அறமாயை எனை இழந்த நலமாய் நின்று போக அறிவின்றி இருந்து.

ஐம்பூதங்களும், ஐம்பொறிகளும் அபக்தி, பேதமின்றி சிவ பேதமாய் ஒடுங்கி, அறிவாகிய ஞானம் சிவமாய் நின்று போத நிலையை மறந்து நிற்கும் நிலையே சிவமாகிய ஒன்று '1' உடன் '0' சேரும் மாய விதி மறந்து ஒன்றாய் நிற்கும் நிலையே உலகியல் ஞானம் இதை அகரம் உணர்த்த 'அ' கரமுதல எழுத்தெல்லாம் ஆதிபகவன் முதற்றே உலகு' என்று திருக்குறளும் விளக்கி நிற்பது ஆன்மீக விளக்கமாகும்.

10 ஆனது 1 ஐ இழந்தால் 0 ஆகும் எண்ணாகிய '0' விதியாகி விதியால் விளைவதே பிறவித் துன்பமாய ஊசல். அது தான் 'அ' கரத்தில் சுழிக்கு அடுத்த நிற்கும் திரை. இதை உணர்ந்து, பேரின்பமாய் சல்லாபத்தை அடைந்து இருத்தலே யோக நிலை. இறைவனை சதா சிந்தனை கொள்ளுமுயிர் 'அ' கரத்திலேயே நேர்கோடு வழியே குறுக்குக் கோட்டினை '1' அடைந்து அகரத்தை பூர்த்தி செய்து முத்தியாய் முற்றுப் புள்ளியை எட்டிவிடும். இது உறுதி என்பதை கற்றுத் தருவதே அகரம்.

அகரத்துள்ளே அநுபூதியை கற்றுத் தந்தவர்கள் திருவள்ளுவர், உமாபதிசிவாச்சாரியார், திருமூலர், அருணகிரிநாதர், சேந்தனார் போன்ற சிவஞானிகளே, வெளிப்படையாக வெளிப்படுத்துதலை அவர்களின் திருக்குறள், திருவருட்பயன், திருமந்திரம், திருப்புகழ், கந்தரனுபூதி, திருவிசைப்பா போன்ற தொகுப்புக்கள் மற்றும் இது போன்ற வேறு சில திருமுறைகளிலேயும் பிரதிபலித்து நிற்கின்றன.

சமய பற்றாளன், முருகன் அடியான்

**சு. ஜெயகோபாலசாமி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாங்கல்ய வரம் அருளிய அம்மன் தாயார்

எனது பெற்றோர் பல வருடங்களாக திருமணம் பேசிய போதும் தடைப்பட்டுக்கொண்டிருந்தது. சிவகுமார் ஐயாவுடன் தொடர்பு கொண்டு வேப்பமரத்து அம்பாளின் ஆலயத்திற்கு சென்றிருந்தேன். தாயிடம் தடைகளை நீக்கி எனக்கொரு வாழ்க்கை தரும்படி மனம் உருகி வேண்டி நின்றேன். ''மாறாத நோயை மாற்றித் தந்தது போல் சிறு கால தாமதத்தோடு நானே களத்தில் இறங்கி உன் திருமணத்தை நடத்தி வைப்பேன் என்றும் இவ்வருட ஆவணிக்கிடையில் அல்லது ஆவணி மாதமோ உன்கழுத்தில் தாலி ஏற்றி வைப்பேன்'' என எனக்கு உறுதிமொழி தந்தார். இவ்வருடம் பங்குனி மாத காலப்பகுதியில் மீண்டும் எனக்கு ஏற்பட்ட துன்பத்தில் இருந்து மீட்டு இதே பங்குனி மாதமே எனது திருமணத்தை நிச்சயித்து சித்திரை மாதத்தில் எனது திருமணத்தை நடாத்தி வைத்து எனக்கு அழகியதொரு வாழ்க்கையினை அமைத்து தந்தார்.

பிரான்சில் கடமையாற்றும் மாதகலைச் சேர்ந்த கிருஸ்ணசீலன் என்பவருக்கும் எனக்கும் திருமணம் முடிந்து ஒரு வாரத்திற்குள் அம்பாள் எனக்கு கனவிலே பச்சை நிற சாறியுடுத்தி பூ, பொட்டு, நகை என அணிந்து மங்களகரமான காட்சியினை தந்தார். தாயார் வாக்கு தரும்போது கேட்டது போல் ஒவ்வொரு வருடமும் அன்னதானம் செய்வேன் எனவும் வாக்கு கொடுத்தேன். இவ்வருடம் பலதரப்பட்ட உணவு படைத்து பெரிய மடை போடும்படியும் வாக்கு தந்து கனவிலே சிவனும் உமையுமாக தோன்றி நீத்துப்பெட்டியைக் காட்டி பிட்டு படைக்கும்படி கூறினார். அவ்வாறே பல உணவுகள் செய்து என் தாயாருக்கு படைத்து பிரார்த்தனை செய்தேன்.

நான் வணங்கும் குல தெய்வங்களையும் அம்மன் தாயாரையும் கதியென மனமுருகி வேண்டி நிற்போமானால் எத்தனை துன்பம் வந்தாலும் அவற்றில் இருந்து எமை காப்பாற்றி வாழ வைப்பார்கள். தாயாரின் அற்புதம் வளர்ந்துகொண்டு செல்லும்.

அடியவள்
**கிஷ்ணசீலன் சிந்துகா**

அம்பாள் 2015ம் ஆண்டும் சிவகுமார் ஐயா மூலமாக எனக்கு ஓர் அற்புதத்தை நிகழ்த்தியிருந்தார். 2015ம் வருட அற்புதங்கள் புத்தகத்திலும் அவ்வற்புதம் பிரசுரமாகியிருந்தது. அவ்வற்புதமும் மறு பிரசுரமாக அடுத்த பக்கத்தில் பிரசுரமாகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தீரா நோய் தீர்த்த ஏழாலை கிழக்கு சிங்கம் வைரவரின் அற்புதம்

ஏழாலை கிழக்கு, சிந்துகா நடேஸ்வரன் ஆகிய நான் தாதிய மாணவியாக யாழ்ப்பாணம் தாதிய பயிற்சிகள் கல்லூரியில் பயிற்சி பெற்றுக் கொண்டிருந்தேன். அவ்வேளையில், அதாவது 2014 ஆவணி மாதத்திலிருந்து நோயினால் பீடிக்கப்பட்டேன். இதனால் பயிற்சி நெறியையும் தொடர முடியவில்லை. யாழ்ப்பாணம், கொழும்பு என பல வைத்தியசாலைகளிலும் சிகிச்சை பெற்றும் குணமடையவில்லை. 2015ல் இரண்டாவது தடவையாகவும் கொழும்பு வைத்தியசாலையில் இறுதியாக செய்த மருத்துவ பரிசோதனையிலும் என்ன நோய் எனக் கண்டறியப்படவில்லை.

எதைச்சாப்பிட்டாலும், பருகினாலும் உடனே வாந்தியாக வெளியேறும் இதனால் தளர்ச்சி நிலையை அடைந்தேன். இரண்டு நாட்களுக்கு ஒருதடவை சேலைன் ஏற்றிக்கொள்ளப்படும். இதனால் எனது அம்மா அப்பா அம்மம்மா எல்லோரும் நிம்மதியை இழந்து அல்லலுற்றனர். நான் குடும்பத்தில் மூத்த பெண்பிள்ளை. இந்நோயினால் நல்ல தொழிலினையும் இழந்துவிட்டேன். எங்கு சென்றும் சுகப்படமுடியாமல் உள்ளது என்கின்ற விரக்திநிலையிலே ''இறைவா! இதற்கு நீதான் வழிகூறு'' என இறைவனிடத்தில் தஞ்சம் அடைந்தோம். இந்நேரத்தில் ஏழாலை (ஏழு ஆயங்கள்) அத்தியடி விநாயகரின் 2015 வைகாசி மாத இரதோற்சவத்தில் சிவகுமார் ஐயாவைச் சந்தித்தோம். ''இந்தத் துன்பம். வீட்டுக்கு வந்த இரண்டு பாம்புகளை அடித்தீர்களா'' என்று கேட்டு, பாம்பின் சாபம் உடம்பில் நஞ்சுத்தன்மையை தோற்றுவித்துள்ளது என்றார் ஐயா. ''கிணற்றுக்குள் நின்ற ஒரு பாம்பை அப்பா அடித்தார். வீட்டுக்குள் வந்த நாகபாம்புக்கு மண்ணெண்ணெய் ஊற்றினோம்'' என்று கூறினோம்.

09.06.2015 செவ்வாய்க்கிழமையன்று எங்கள் அருகிலுள்ள சிங்கம் வைரவர் ஆலயத்தில் பரிகாரப்பூசை செய்து, அறுகம்புல்லை பூஜை செய்து தந்தார் ஐயா. இதை அவித்துக் குடித்தபின் என் வருத்தம் சுகமடைந்தது. எங்கள் குடும்பத்தினர் எல்லோருக்கும் வியப்பாகவும், மகிழ்வாகவும், மனநின்மதியும் ஏற்பட்டது. சிவகுமார் ஐயா அவர்களின் ஆன்மீக இறையருள் பலத்தினால் மீட்சிபெற்றதை என்றுமே மறவோம், நன்றி வணக்கமாக 19.06.2015 வெள்ளியன்று வைரவப் பெருமானுக்கு அபிஷேகம் அன்னதானப் பூசை செய்து வணங்கினோம். எம்பெருமான் மீது நம்பிக்கைவைத்து வழிபடும் அடியவர்களை என்றுமே இறைவன் கைவிட்டதில்லை என்பதற்கு இறையருளே சான்றாகும்.

**சிந்துகா நடேஸ்வரன்** (ஏழாலை கிழக்கு)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடவுளின் அனுக்கிரகம்

எனது பெயர் சிவதாரணி. ஆனைக்கோட்டை எனது பிறப்பிடம். தற்போது சுவிஸில் வசிக்கின்றோம். எனக்கு இங்கு வந்தவுடன் கவலைகள், யோசனைகளுடன் அடிக்கடி எனது கனவில் பாம்பு துரத்துவதாகவும், அம்மன் கோவில் தெரிவதாகவும் உள்ளே செல்லமுன் கதவு பூட்டுவதாகவும் காட்சிப்படுத்தியது. சுவிஸிற்கு வரமுன் ஒருநாள் நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தில் ''இந்து சமய அற்புதங்கள்'' கிடைக்கப் பெற்றது. அதை வாசித்தேன். அதை சுவிஸிற்கு வரும்போது கொண்டு வந்தேன். பல நாட்களுக்குப் பின் அம்பாளின் அருளால் நினைவுக்கு வந்தது. அதை எடுத்து படித்த பின் சிவகுமாரன் ஐயாவுடன் தொடர்பு கொண்டபோது எனது பெயரைக் கேட்டுவிட்டு பாம்பு வருவதும் எனது ஊரில் வீட்டிற்கு பின்புறமாக ஒரு புற்று இருந்ததாகவும் அம்மன் கோவில் எனது வீட்டிற்கு பின்புறமாக தள்ளி உள்ளதாகவும் கூறினார். அது அனைத்தும் உண்மையாக இருந்தது. ஒரு நிமிடம் ஆச்சரியத்தோடும் பாம்பு வருவது பற்றி கேட்டவுடன் நாகதோஷம் இருப்பதாகவும் அதை நிவர்த்தி செய்தால் சரியாகும் எனக்கூறினார். அதேபோல் ஐயா பூஜை செய்து அனுப்பிய பரிகாரப் பொருட்கள் என் கையில் கிடைக்காமல் தடைப்பட்டது. அடுத்த நாள் சுவிஸிலிருந்து ஊருக்கு திருப்பி அனுப்பப்போவதாக குறுஞ்செய்தி வந்தது. கடவுளே என்ன சோதனை என நினைத்து படுத்தபோது ஒரு அந்தணர் நூலும் திருநீறும் தருவதுபோல் கனவில் தோன்றியது. அடுத்த நாள் அந்த பரிகார பொருட்கள் எனக்கு கிடைத்தது. ஐயா சொன்னது போல் செய்தேன்.

அதுபோல் ஐயா சுவிஸிற்கு வருகை தந்தபோது அவரைக் காண எனக்கு சந்தர்ப்பம் கிடைத்தது. ஐயா ஜெனீவாவிலுள்ள என் வீட்டுக்கு வருகை தந்தமையானது எமக்கிருந்த மிகுதிக் குறைகளும் நீங்கின. எல்லாம் அந்த கடவுளின் நன்மை எனவும், கடவுளில் நான் வைத்த அதீத நம்பிக்கையும் தான் காரணம் எனவும், இப்புத்தகத்தில் எனக்கும் எழுத சந்தர்ப்பம் கிடைத்ததை நினைத்து சந்தோஷம் அடைகிறேன். சிவகுமாரன் ஐயாவுக்கு நன்றியை கூறிக்கொள்கிறேன்.

''திக்கற்றவர்களுக்கு தெய்வமே துணை''

**சிவதாரணி**
சுவிஸ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வல்வை ஸ்ரீ முத்துமாரி அம்பாள் ஆலய 2018 சித்திரை இரதோற்சவ வெளியீடான ''வல்வைநகர் மாதரசி'' என்ற நூலில் வெளியீடான இவ்வற்புதம் மறுபதிப்பாக இடம்பெறுகின்றது.

## அம்பாள் அற்புதம் . . . !

ஆதிகோவிலடி வல்வெட்டித்துறையைச் சேர்ந்த எனது பெயர் அருமைத்துரை செல்வச்சந்திரன். கடந்த ஐந்து வருடங்களுக்கு முன்பு லண்டனுக்கு சென்று சிறிது காலம் தொழில் புரிந்த பின் பலவிதமான நோய்த்தாக்கங்களுக்கு ஆளாகினேன். தொழிலாற்ற முடியாத நிலை. ஒழுங்காக உணவுண்ண விருப்பமற்ற நிலை. மனநிலையும் தளர்வடைந்த நிலையில் 2017.11.19ஆந் தேதியன்று இலங்கைக்கு வந்தேன். லண்டனிலும் பின் இலங்கைக்கு வந்த நிலையிலும் சில மாதங்களாக வைத்தியங்கள் செய்தநிலையிலும் எவ்வித பலனும் சுகமும் ஏற்படவில்லை.

இனி நான் சுகம்பெற்று லண்டனுக்கு மீண்டும் செல்வேனோ என்ற கேள்வியுடன் சஞ்சலமுற்றிருந்த போது எனது உறவினரொருவரின் (நவம் மாமா) அறிவுறுத்தலுக்கமைய, இப்புத்தக ஆசிரியரான சிவகுமார் அவர்களின் அம்பாள் ஆலயத்திற்குச் சென்றேன். எங்கள் குலதெய்வத் தாயாரான வல்வை முத்துமாரி அம்பாளிடம் வேண்டுதல் செய்து நேர்த்தி வைத்துவிட்டு வரும்படி கூறினார். நான் கரகம் எடுத்த நிகழ்வு ஞாபகத்திற்கு வந்தது. ஐயா அவர்களின் தான்தோன்றி அம்பிகையான வேப்பமரத்து அம்பாளிடம் எனது உறவினர் சகிதம் தொடர்ச்சியாகச் சென்று வழிபாடு செய்து பார்வையிட்டு வந்தேன். ஒரு மாதத்தில் பூரணசுகம் அடைந்தேன்.

இதன் பின்பு அம்பாளும் இரண்டு வடிவங்களில் கனாவில் வந்தார். நாகபாம்பு ஒன்று ஆடியாடி என்னருகில் வந்து நிற்பதையும், மூதாட்டி வடிவில் முத்துமாரித் தாயார் என்னருகில் வந்து வேப்பிலையால் வருடுவதையும் கண்டுகொண்டேன். மறுநாள் காலையே புத்துணர்ச்சி பெற்றவனாக அம்பாளிடம் அன்பிற்குள் அடைக்கலமானேன். இவ்வருடம் (2018 சித்திரை) மஹோற்சவம் வரைக்கும் நான் லண்டலுக்கு செல்லாது இங்கேய நின்று விரதமனுட்டித்து மஹோற்சவம் நிறைவடைந்த பின்பே லண்டனுக்கு மீண்டும் செல்வதாக தாயாரிடம் உறுதி பூண்டேன். இதன்பிரகாரம் எனது உடல் வருத்தம், வயிற்று உபாதை, மனச்சஞ்சலம் முற்றிலுமாக குணமடைந்து சித்திராப் பௌர்ணமியன்று அம்பாள் தீர்த்தோற்சவத்திற்குப் பின் லண்டனுக்குச் செல்லும் போது வைத்த நேர்த்தியானது, சில வருடங்களில் மீண்டும் இலங்கைக்கு வரும் போது முத்துமாரி அம்பாளுக்கு கரகாட்டம் எடுப்பதாகவும், ஐயா அவர்களின் வேப்பமரத்து அம்பாள் ஆலயத்திற்கு நிதியுதவி செய்வதாகவும் உறுதி கொண்டேன்.

''சைவத்தின் மேற்சமயம் வேறில்லை''

**அருமைத்துரை செல்வச்சந்திரன்**
ஆதிகோவிலடி, வல்வெட்டித்துறை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அற்புதம் நிகழ்த்திய ஆத்தாள்

பத்திரகாளி கோவிலடி, பொலிகண்டியைச் சேர்ந்த எனது பெயர் நவரத்தினம் கவிதாசன். நான் கடந்த பத்து வருடங்களாக கனடா ரொரண்டோவில் வசிக்கின்றேன். அந்நேர யுத்த சூழ்நிலை காலத்தில் யாழ்ப்பாணத்தில் ஐஸ்பழ வாகன சாரதியாக வலம்வந்த என்னை; இன்றைய சிறப்பான வாழ்க்கை நிலைக்கு உடுப்பிட்டி வேப்பிலைக்காரி அம்பாளே அடிகோலி வைத்தாள். தற்போது நான் கனடாவில் மனைவி, நான்கு பிள்ளைகளுடன் கனரக வாகன சாரதியாக கடமையாற்றி சிறப்பாக வாழ்கின்றேன். 2007ம் ஆண்டு நான் முதன் முதலில் வேப்பிலைக்காரித் தாயிடம் சென்ற போது ஆலயக் கட்டடம் எதுவுமில்லாமல் ஒரு வேப்பமரத்திற்கு மட்டும் பூஜை நடைபெற்று வந்தது. அந்நேரம் சிவகுமார் ஐயா அவர்கள் எனக்குரைத்த அருள் வாக்கானது; ''வெளிநாட்டிலிருந்து உனக்கொரு அழைப்பு வரச்செய்கின்றேன். அதனூடாக சீரான வாழ்க்கை அமைந்து கொள்ளும்'' என்றார். இந்த வாக்கினை என்னால் நம்பமுடியாமல் இருந்தது. ஒருவாரம் கழிந்த நிலையில் அவ்வாலய கிணற்றைக் கலக்கி இறைத்து துப்பரவு செய்துகொண்டிருந்த வேளை தொலைபேசி அழைப்பு வந்தது. ஆச்சரியத்துடன் ஆத்தாளின் மகிமையை எண்ணினேன். நான் கல்வி புரியும் போது என்னை விரும்பியிருந்த பெண் கனடாவுக்குச் சென்றபின் பத்துவருடங்களாக என்னுடன் எந்தவொரு தொடர்புமில்லாமல் மறந்திருந்த பெண்ணிடமிருந்து என்னைக் கனடாவிற்கு வரும்படி அழைப்பு வந்தது. ஒரு மாதத்தில் எனக்கும் அப் பெண்ணிற்கும் திருமணப் பதிவிற்காக நான் கொழும்பிற்கு செல்லும் போது, குத்துவிளக்குக் கொடுத்து பொங்கல் செய்துவிட்டுச் சென்றேன். மீண்டும் நான் 2015ம் ஆண்டு இலங்கைக்கு வந்தபோது பல ஆலயங்களுக்கும் சென்ற நான் வேப்பிலைக்காரி அம்பாளிடம் செல்லவில்லை. ஏன் மறந்தேனோ தெரியவில்லை. இவ்வருடம் ஆனி மாதம் பொலிகண்டியில் எனது அம்மாவின் தாலிக்கொடியும், சங்கிலியுமாக இரண்டு நகைகள் தொலைந்து விட்டன. மனமுடைந்துபோன அம்மாவின் கவலை என்னை நித்தமும் வாட்டியது. சிவகுமார் ஐயாவுடன் தொடர்பை ஏற்படுத்தினேன். ''25.06.2018 இல் அம்பாளுக்கு கும்பாபிஷேகம் நடைபெறவுள்ளது. நீங்கள் ஆலய கட்டுமானப் பணிக்கோ கும்பாபிஷேகத்திற்கோ ஒன்றும் செய்யவில்லை. இது அம்பாளின் திருவிளையாடல் தான். லண்டனிலும் சுவிசிலும் அம்பாளிடம் அற்புதமடைந்த அடியவர்களிடம் இதுபோன்ற சில சம்பவங்கள் நடைபெற்றும், தாயார் கனவில் சென்றும் நிதிதிரட்டி கும்பாபிஷேகம் நடைபெற திருவிளையாடல்கள் நடந்தேறியுள்ளன. நீ இப்போது ஒன்றும் செய்ய வேண்டாம். நகைகள் கிடைத்தால் உடனே பங்களிப்பு செய்கிறேன் என்று மட்டும் ''நினைத்துக்கொள்'' என்றார். மூன்று நாட்களில் நகைகள் கிடைத்தன. எப்படித்தொலைந்தன, எப்படிக் கிடைத்தன என்பது மட்டும் புரியாத புதிராக இருந்தது. கனடாவில் அவ்வப்போது சுவாமித்தட்டில் சில்லறைக் காசுகள் உண்டியலில் சேர்ப்பது என் வழக்கம். அவற்றை அப்படியே இலங்கைக்காசு ஒரு இலட்சத்து முப்பதாயிரம் ரூபாவாக அனுப்பி வைத்தேன். **- சர்வமும் சக்தி மயம் -**

**ந. கவிதாசன்** (தொ.பே: 001 6472010073)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இவ்வெளியீடு சிறப்புற மனமுவந்து நிதியுதவியளித்தோர் விபரம்

| | |
|---|---|
| றமணா, றஜிதா (வல்வெட்டித்துறை) | 25000 |
| ஐங்கரன் பிரான்ஸ் (கைதடி) | 15000 |
| அஸ்வின் சிவகுமார் (U.K) | 10000 |
| செல்வன் சிந்துஜன் உதயகுமார் (ஜேர்மனி) | 10000 |
| கர்ணன் தேவமணி குடும்பம் (பஜார், யாழ்ப்பாணம்) | 10000 |
| சந்திரதேவன் பிரசாத் (புன்னாலைக்கட்டுவன்) | 10000 |
| துரைரத்தினவதி ரவீந்திரன் (கொட்டாஞ்சேனை) | 10000 |
| சண்முகநாதன் ஆசிரியர் குடும்பம் (அராலி வடக்கு) | 5100 |
| மகேந்திரராசா விஜிதரன் (அச்சுவேலி வடக்கு) | 5100 |
| சிவராசா கேதீஸ்வரன் (அச்சுவேலி) | 5000 |
| திருமதி சிந்துகா கிருஷ்ணசீலன் (ஏழாலை கிழக்கு) | 5000 |
| திரு. N. சதீஸ்குமார் (மலாயன் கபே, யாழ்ப்பாணம்) | 5000 |
| த. பரமேஸ்வரி (சாமியன் அரசடி, கரவெட்டி) | 5000 |
| V. விஜித்தன் (அவுஸ்ரேலியா) (தொண்டைமானாறு) | 5000 |
| செல்வி மயூரி ஏகாந்தன் (வல்வெட்டித்துறை) | 5000 |
| திருமதி அரசரத்தினம் (ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி) | 5000 |
| திரு. K.L. ரூபன் (மட்டக்களப்பு) | 3000 |
| செல்வகௌரி ஆசிரியை (பருத்தித்துறை) | 3000 |
| செல்வி ம. அபிராமி (மட்டக்களப்பு) | 3000 |
| தர்மசீலன் வனிதா (கொட்டடி, யாழ்ப்பாணம்) | 3000 |
| விமலகாந்தன் கேசபவன் (அச்சுவேலி) | 3000 |
| வீரசிவாகரன் (இடைக்காடு) | 3000 |
| சிவதாசன் சிவாஜினி (கனடா) | 2000 |
| சிவராசா ஆனந்தகலா (கரணவாய், கரவெட்டி) | 2000 |
| பாலசுந்தரம் தயாநிதி (தெல்லிப்பளை) | 2000 |
| ந. சந்துரு (மட்டுவில்) | 2000 |
| L. நிமலன் (அச்சுவேலி) | 2000 |
| ஹப்பி ரெக்ஸ் நெல்லியடி | 2000 |
| ஜனகன் நிசந்தா (அச்சுவேலி) | 2000 |
| செல்லமுத்துஸ் ரெக்ஸ் நெல்லியடி | 1000 |
| ஸ்ரீகரன் (உடுப்பிட்டி) (மயிலிட்டி) | 1000 |
| கௌரி லோகசீலன் (தபால் கந்தோர், காங்கேசன்துறை) | 1000 |
| ஜெயந்தன் மரக்கறி வாணிபம், உடுப்பிட்டி | 1000 |
| காந்தன் பல்பொருள் வாணிபம், உடுப்பிட்டி | 1000 |
| பாலகிருஷ்ணன் வதனி (கொட்டடி, யாழ்ப்பாணம்) | 1000 |
| | 173200 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உடுப்பிட்டி, வேப்பிலைக்காரி அம்பாள் ஆலய மஹா கும்பாபிஷேகத்தை சிறப்புற நிகழ்த்திய, இனுவிலம்பதி விஸ்வநாதேஸ்வரர் திருக்கோவில் பிரதம குரு சிவஸ்ரீ சியம்புலிங்கக் குருக்கள் ஐயா அவர்களைக் கௌரவித்த போது

இரண்டு ஆலயங்களை நிர்வகித்து இறையருளால், துன்பப்பட்ட மக்களின் துயர் துடைக்கும் சேவையாளன் ஈஸ்வரானந்சிவம் (வலி ஐயா) அவர்களைக் கௌரவித்த போது



தமிழ்ப்பூங்கா. 021 226 4014

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org